# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு (திருத்தச்) சட்டம்

---

(2003 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2003, மே மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் **வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 47.00 தபாற் செலவு : ரூபா 11.25

# 2003 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு (திருத்தச்) சட்டம்

[2003 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ— ஓ. 3/2002

## 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 2003 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்கச் சட்டத்துக்கான விரிவுப்பெயரைத் திருத்துதல்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றோராம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்துக்கான விரிவுப்பெயர், "பிணையங்களில் வர்த்தகஞ் செய்கின்ற தொழிலில் ஈடுபட்டுள்ள பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை நிலையங்களுக்கும், கூறுநம்பிக்கைப் பொறுப்புக்களுக்கும், பங்குத்தொகுதித் தரகர்களுக்கும் அத்துடன் பங்குத்தொகுதி வியாபாரிகளுக்கும் உரிமம் வழங்குவதற்கும் ;" என்ற சொற்களுக்குப் பதிலாக "பிணையங்களில் வர்த்தகஞ்செய்கின்ற தொழிலில் ஈடுபட்டுள்ள பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை நிலையங்களுக்கும், ஒவ்வொரு கூறுநம்பிக்கைப் பொறுப்புத் தொடர்பிலுமான முகாமைக் கம்பெனிகளுக்கும், பங்குத் தொகுதித் தரகர்களுக்கும் அத்துடன் பங்குத்தொகுதி வியாபாரிகளுக்கும் உரிமம் வழங்குவதற்கும் ; சந்தை இடைத்தரகர்களைப் பதிவுசெய்வதற்கும் ;" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றோராம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு, அதன் (இ) என்னும் பந்தியில் "உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகர் அல்லது உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரி ஒருவர் அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறு

2 - H 17162 - 1,050 (2002/11)

கின்றமையால் எழும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "எவரேனும் உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகர் அல்லது உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரி அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்ற இயலாதவராகக் காணப்படுகின்றமையின் விளைவாக எழுகின்ற" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றோராம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (ஆஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் —

"(ஆஆஆ) சந்தை இடைத்தரகராகத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு எவரேனுமாளுக்குப் பதிவுச் சான்றிதழொன்றை வழங்குதலும் அத்தகைய தொழில் தகுந்தமுறையில் நடாத்தப்படுவதனை உறுதிப்படுத்துதலும் ;";

(2) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(இ) உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றுக்கு அல்லது உரிமம்பெற்ற பங்குத் தொகுதித் தரகரொருவருக்கு அல்லது உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரியொருவருக்கு அல்லது உரிமம்பெற்ற முகாமைக் கம்பெனியொன்றுக்கு அல்லது கூறுநம்பிக்கைப் பொறுப்பொன்றின் நம்பிக்கைப்பொறுப்பாளருக்கு அல்லது பதிவுசெய்யப்பட்ட சந்தை இடைத்தரகரொருவருக்குக் காலத்துக்குக்காலம் பொதுவான அல்லது குறிப்பான பணிப்புக்களை வழங்குதல் ;";

(3) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "உரிமமளிக் கப்பட்ட பங்குத்தொகுதித் தரகர் அல்லது உரிமமளிக் கப்பட்ட பங்குத்தொகுதி வியாபாரி தமது ஒப்பந்தக் கடப்பாடுகளைச் செய்யத் தவறுமிடத்தவிடத்து எழும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "எவரேனும் உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகர் அல்லது உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரி தமது ஒப்பந்தக் கடப்பாடுகளைச் செய்யமுடியாதவராகக் காணப்படுவதன் விளைவாக எழுகின்ற" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(4) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் —

"(எ) உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை யொன்றில் பிணையங்களின் நிரற்படுத்து தலையும் வழங்குகையும் ஒழுங்குபடுத்துதல்;

(ஏ) நிரற்படுத்தலுக்காக அதற்குச் செய்யப்பட்ட எவையேனும் விண்ணப்பங்களை நிராகரிக் கும்படி உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றைப் பணித்தல் ;";

(5) அப்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில் "தரப்பட்டுள்ள எவையேனும் நிரற்படுத்தப்பட்ட பிணையங்களின்" என்ற சொற்களுக்குப் பதிலாக "எவையேனும் நிரற்படுத்தப்பட்ட பிணையங்களின்" என்ற சொற் களை இடுவதன் மூலமும் ;

(6) அப்பிரிவின் (ஐ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஐ) உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை யின், உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகரின் அல்லது உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியா பாரியின், உரிமம்பெற்ற முகாமைக் கம் பெனியின் அல்லது கூறுநம்பிக்கைப்பொறுப்

பொன்றின் நம்பிக்கைப்பொறுப்பாளரொருவரின், பதிவுசெய்யப்பட்ட சந்தை இடைத்தரகரொருவரின் அல்லது ஏதேனும் நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியின் ஏதேனும் செயற்பாடு பற்றி விசாரணை செய்தலும் நுண்ணாய்வுகளை நடாத்துதலும் ;";

(7) அப்பிரிவின் (ஔ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஔ) எவரேனும் உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகரினால் அல்லது உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரியினால் அல்லது உரிமம்பெற்ற முகாமைக் கம்பெனியினால் அல்லது கூறுநம்பிக்கைப்பொறுப்பொன்றின் நம்பிக்கைப்பொறுப்பாளரினால் அல்லது பதிவுசெய்யப்பட்ட சந்தை இடைத்தரகரினால் அல்லது ஏதேனும் நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியினால் புரியப்பட்ட சட்டவரம்பு மீறுகை பற்றிய முடிவெடுப்புக்களை வெளியிடுதல் ;";

(8) அப்பிரிவின் (ங) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :—

"(ங) கையேற்பு அல்லது இணைப்பு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிரற்படுத்தப்பட்ட கம்பெனிகளுக்கிடையே இருக்குமிடத்து அல்லது அத்தகைய கையேற்பில் அல்லது இணைப்பில் சம்பந்தப்பட்டுள்ள திறத்தவர்களுள் ஆகக்குறைந்தது ஒரு திறத்தவராவது நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியாகவிருக்குமிடத்து, கையேற்புக்களை அல்லது இணைப்புக்களை ஒழுங்குபடுத்துதல் ;

(ச) எவரேனுமாளினால் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியின் அல்லது ஒழுங்குவிதியின்

சார்த்தப்பட்ட ஏதேனும் மீறுகை அல்லது முரண்பாடு பற்றி நுண்ணாய்வுகளை நடாத்துதல்; அத்துடன்

(ஞ) இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கு அல்லது அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு இடைநேர்விளைவாகக்கூடியவாறான அல்லது உகந்ததையாகக்கூடியவாறான அத்தகைய வேறு செயல்கள் யாவற்றையும் செய்தல்.".

5. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேராம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(அ) உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனைகள், உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகர்கள், உரிமம்பெற்ற பங்குத் தொகுதி வியாபாரிகள், உரிமம்பெற்ற முகாமைக் கம்பெனிகள் அல்லது கூறுநம்பிக்கைப் பொறுப்புக்களின் நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் அல்லது பதிவுசெய்யப்பட்ட சந்தை இடைத்தரகர்கள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அவற்றின்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கு அல்லது விதிகளுக்கு இசைந்தொழுகும் வகையில் தொழிற்படுகின்றாரா அல்லது தொழிற்படுகின்றனவாவென்பதைத் தீர்மானிப்பதற்கென அவர்களின் அல்லது அவற்றின் செயற்பாடுகள் பற்றிய சோதனைகளை நிறைவேற்றுதலும், அத்துடன் விடயத்துக்கேற்ப, எந்த உரிமம்பெற்ற பங்குத்தொகுதித்தரகரின், உரிமம்பெற்ற பங்குத் தொகுதி வியாபாரியின்,

உரிமம்பெற்ற முகாமைக் கம்பெனியின் அல்லது கூறுநம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளரின் அல்லது பதிவு செய்யப்பட்ட சந்தை இடைத்தரகரின் செயற்பாடுகள் சோதனைசெய்யப்படுகின்றனவோ அந்தப் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையிடம், பங்குத் தொகுதித் தரகரிடம் பங்குத்தொகுதி வியாபாரியிடம், முகாமைக் கம்பெனியிடம், நம்பிக்கைப் பொறுப்பாளரிடம் அல்லது சந்தை இடைத்தரகரிடம் இருந்து, அத்தகைய சோதனைகளை நிறைவேற்றுவதில் உற்பட்ட செலவுத் தொகைகளை இறுத்தலும் ;";

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனைகளையும், பங்குத் தொகுதித் தரகர்களையும், பங்குத்தொகுதி வியாபாரிகளையும், அத்துடன் உரிமம்பெற்ற கூறுநம்பிக்கைப் பொறுப்புக்களின் முகாமைக் கம்பெனிகளையும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "உரிமம்பெற்ற பங்குத் தொகுதிப் பரிவர்த்தனைகளையும், உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகர்களையும், உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரிகளையும், கூறுநம்பிக்கைப் பொறுப்புக்களின் உரிமம்பெற்ற முகாமைக் கம்பெனிகளையும், அத்துடன் பதிவுசெய்யப்பட்ட சந்தை இடைத்தரகர்களையும்" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில் முறையே, "உரிமம்பெற்ற கூறுநம்பிக்கைப் பொறுப்பின் முகாமைக் கம்பெனியை" அத்துடன் "விதித்துரைக்கப் பட்ட விபரங்களைக்" என்ற சொற்களுக்குப் பதிலாக, முறையே, "கூறுநம்பிக்கைப் பொறுப்பின் உரிமம் பெற்ற முகாமைக் கம்பெனியை" மற்றும் "ஆணைக் குழுவினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக் கப்படக்கூடியவாறான அத்தகைய விபரங்களைக்" என்ற சொற்களையும் இடுவதன் மூலமும்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 14அ மற்றும் 14ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தில் 14அ, 14ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

"தீர்வை விதித்தல்.

14அ. (1) உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின்மீது பதியப்பட்ட அல்லது அத்தகைய கொள்வனைகாரரினாலும் விற்பனை யாளரினாலும் அதன் விதிகளின் கீழ் அறிவிக்கப் பட்ட பிணையங்களின் ஒவ்வொரு கொள்வன வினதும் விற்பனையினதும் மீது, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களிலான தீர்வை ஒன்று இறுக்கப்படுதலும், விதிக்கப்படுதலும் அத்துடன் செலுத்தப்படுதலும் வேண்டும். வெவ்வேறு வகுப்பினவான பிணை யங்கள் தொடர்பில் வெவ்வேறு வீதங்கள் குறித்துரைக்கப்படலாம்.

(2) இப்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட தீர்வை, வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட வேறேதேனும் வரிக்கு மேலதி கமானதாக இருத்தல் வேண்டும்.

தீர்வை நிதியம்.

14ஆ. (1) தீர்வை நிதியம் என அழைக்கப்படும் நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும் ; 14அ என்னும் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட தீர்வையின் வருமபடிகள் இதற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) பின்வரும் நோக்கங்களுக்காக, ஆணைக் குழுவினால் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் தீர்வை நிதியத்தி லிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) பிணையங்கள் சந்தையை அபிவிருத்தி செய்தல் ;

(ஆ) 38 ஆம் பிரிவின்கீழ்த் தாபிக்கப்பட்ட நட்டஈட்டு நிதியத்தின் வரவுக்கிருக்கும் பணங்களை அதிகரித்தல் ; அத்துடன்

(இ) ஆணைக்குழுவின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காக அதன் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல்.

(3) தீர்வை நிதியத்தின் வரவில் இருக்கும் பணமானது, ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் ஆணைக்குழுவினால் முதலீடு செய்யப்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் III ஆம் பாகத்தின் தலையங்கத்தை மாற்றீடு செய்தல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவுக்கு உடன்முன்னர் III ஆம் பாகத்தில் காணப்படுகின்ற தலையங்கம் இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் தலையங்கம் இடப்படுகின்றது :—

"பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றுக்கு, பங்குத் தொகுதித் தரகரொருவருக்கு அல்லது பங்குத்தொகுதி வியாபாரியொருவருக்கு உரிமம் வழங்குதலும் அத்துடன் சந்தை இடைத்தரகர்களைப் பதிவுசெய்தலும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு, "விடயத்துக்கேற்றாற்போல்" என்ற சொற்களிலிருந்து அப்பிரிவின் முடிவு வரையிலான எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"விடயத்துக்கேற்றாற்போல், பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையாக, பங்குத்தொகுதித் தரகராக அல்லது பங்குத் தொகுதி வியாபாரியாக உரிமமளிக்கப்படுவதற்காக, அதற்கெனக் காலத்துக்குக்காலம் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும், அத்தகைய ஆவணங்களுடனும், அத்தகைய கட்டணத்துடன் சேர்த்து ஆணைக்குழுவுக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.".

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 19அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"சந்தை இடைத்தரகர்களைப் பதிவுசெய்தல்.

19அ. (1) சந்தை இடைத்தரகரொருவராகத் தொழில் புரிகின்றவரான அல்லது தொழில்புரிய முன்னங்கொண்டுள்ளவரான ஆளெவரும், அந்நோக்கத்துக்காக ஆணைக்குழுவுடன் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ்ப் பதிவுசெய்யப்படும் நோக்கத்துக்கான விண்ணப்பமொன்று அதற்கென ஆணைக்குழுவினால் காலத்துக்குக்காலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும், அத்தகைய ஆவணங்களுடனும் அத்தகைய கட்டணத்துடன் சேர்த்தும், ஆணைக்குழுவுக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(3) பதிவுசெய்வதற்கான விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல் ஆணைக்குழுவானது, அதன்கண் கூறப்பட்ட விவரங்களைக் கவனத்திற் கொண்டதன் பின்னரும் அத்துடன் அவசியமெனத் தோன்றுகின்றவிடத்து, தம்பக்க வழக்கை உரைப்பதற்கான சந்தர்ப்பமொன்றை விண்ணப்பகாரருக்கு அளித்தன்பின்னரும் விண்ணப்பகாரர் சந்தை இடைத்தரகராகப் பதிவு செய்யப்படுகின்றாரா அல்லராவென அவருக்கு எழுத்திலான அறிவித்தல் மூலம் தெரிவித்தல் வேண்டும் என்பதுடன், அவர் சந்தை இடைத்தரகரொருவராகப் பதிவுசெய்யப்படுமிடத்து, பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக ஓராண்டுக் காலப்பகுதிக்குச் செல்லுபடியாகவுள்ள சான்றிதழொன்றை அவருக்கு வழங்குதலும் வேண்டும். பதிவுச்சான்றிதழொன்று வழங்கப்பட்ட ஒவ்வோராளும் இச்சட்டத்தில் இதனகத்துப் பின்னர் "பதிவுசெய்யப்பட்ட சந்தை இடைத்தரகர்" ஒருவர் எனக் குறிப்பிடுசெய்யப்படுவார்.

(4) ஆளெவரும், இதற்கான அட்டவணையின் V ஆம் பாகத்தில் தரப்பட்டுள்ள நியதி, நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகினாலொழிய, சந்தை இடைத்தரகரொருவராகப் பதிவுசெய்யப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "உரிமம் முடிவுறுவதற்கு முன்னர் உள்ள ஆறு மாதங்களினுள்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "உரிமம் முடிவுறுவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர்" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(2) உரிமம்பெற்ற பங்குத்தொகுதி தரகரொருவர், உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரியொருவர் அல்லது பதிவுசெய்யப்பட்ட சந்தை இடைத்தரகரொருவர், விடயத்துக்கேற்ப உரிமம் அல்லது பதிவு முடிவுறுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து, விடயத்துக்கேற்ப அவரது உரிமத்தை அல்லது பதிவைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பமொன்றை ஆணைக்குழுவுக்குச் செய்யலாம்" ; அத்துடன்

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "ஆணைக்குழுவானது, உரிமம் புதுப்பித்தலை வழங்குதலில், விடயத்திற்கேற்றாற்போன்று பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை அல்லது உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகர் அல்லது உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரி" என்ற சொற்களை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"ஆணைக்குழுவானது, உரிமம் அல்லது பதிவு புதுப்பித்தலை வழங்குதலில், விடயத்துக்கேற்றாற்போன்று உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை, உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகர், உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரி அல்லது பதிவுசெய்யப்பட்ட சந்தை இடைத்தரகர்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.

11. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றோராம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4)ஆம் மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளில் "பங்குத்தொகுதி வியாபாரி," என்ற சொற்கள், அவ்வுட் பிரிவுகளில் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக, "உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரி," என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 21அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"பதிவொன்றை இடைநிறுத்தலும் இல்லாதாக்குதலும்.

21அ. (1) இச்சட்டத்தின் 19அ என்னும் பிரிவின் கீழ் சந்தை இடைத்தரகரொருவருக்கு வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழை இடைநிறுத்துவதற்கு அல்லது இல்லாதாக்குவதற்கு ஆணைக்குழு தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 21ஆம் பிரிவின் ஏற்பாடுகள், விடயத்துக்கேற்ப (1) ஆம் உட்பிரிவின் கீழான பதிவுச்சான்றிதழொன்றின் ஏதேனும் இடைநிறுத்துகைக்கும் அல்லது இல்லாதாக்குகைக்கும் மற்றும் அது தொடர்பாகவும், ஏற்றவாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**13.** ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"மேன்முறையீட்டு நியாயமன்றத்துக்கான மேன்முறையீடு.

22. (1) (அ) 18அ என்னும் பிரிவின் கீழ் உரிமமொன்றை இடைநிறுத்துகின்ற அல்லது இல்லாதாக்குகின்ற,

(ஆ) 19 ஆம் பிரிவின் கீழான உரிமமொன்றை அல்லது 19அ என்னும் பிரிவின் கீழான பதிவொன்றை வழங்க மறுக்கின்ற;

(இ) 20 ஆம் பிரிவின் கீழ், விடயத்துக்கேற்ப உரிமமொன்றின் அல்லது பதிவொன்றின் புதுப்பித்தலை வழங்க மறுக்கின்ற; அல்லது

(ஈ) 21 அல்லது 21அ என்னும் பிரிவின் கீழ், விடயத்துக்கேற்ப உரிமமொன்றை அல்லது பதிவொன்றை இல்லாதாக்குகின்ற அல்லது இடைநிறுத்துகின்ற;

ஆணைக்குழுவின் முடிவினால் இன்னலுறும் ஆளொருவர் முடிவானது எத்தேதியன்று அத்தகைய ஆளுக்கு அறிவிக்கப்பட்டதோ

அத்தேதியிலிருந்து பதினான்கு நாட்களினுள், மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு, அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(2) இப்பிரிவின்கீழான மேன்முறையீடுகள் குறித்து அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின் கீழ் விதிகள் ஆக்கப்படும்வரை, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மீளாய்வு என்ற வகையிலான விண்ணப்பங்கள் குறித்து அவ்வுறுப்புரையின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ்ச் செய்யப்பட்ட ஒவ்வொரு மேன்முறையீட்டுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) மேன்முறையீட்டு நீதிமன்றமானது, (1) ஆம் உட்பிரிவின் கீழ் அதற்குச் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றின்மீது ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட முடிபை எதிர்மாறாக்கலாம், திரிபுபடுத்தலாம் அல்லது தள்ளிவிடலாம் அல்லது நீதிநலன்கள் தேவைப்படுத்தக் கூடியவையான அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.".

**14.** ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றோராம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(1) விடயத்துக்கேற்ப, உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை ஒன்று, உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகர் ஒருவர் அல்லது உரிமம் பெற்ற பங்குத்தொகுதி வியாபாரி ஒருவர், 15 ஆம் பிரிவின் கீழ்ப் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையாக, பங்குத் தொகுதித்தரகராக அல்லது பங்குத்தொகுதி வியாபாரியாக உரிமமொன்றைப் பெறுவதற்கான விண்ணப்பத்தில் ஏலவே கொடுத்துதவப்பட்ட எவையேனும் முக்கியமான விபரங்களைத் திருத்த

உறுதிசெய்கின்றவிடத்து அல்லது அதில் குறித்துரைக்கப்பட்ட நிலையிலிருந்தான மாற்றமொன்றுக்கு உட்பட்டவராகுமிடத்து அல்லது உட்பட்டவராயிருப்பதற்கு முன்னங்கொண்டுள்ளவிடத்து, அத்தகைய திருத்தம் அல்லது மாற்றம் பயனுறுத்தப்படுவதற்கு முன்னர் ஆணைக்குழுவுக்குத் தெரிவித்தலும் அத்துடன் அதன் முற்சம்மதத்தைப் பெறுதலும், விடயத்துக்கேற்ப, அத்தகைய உரிமம்பெற்ற பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையின், உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகரின் அல்லது உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரியின் கடமையாதல் வேண்டும்." ; அத்துடன்

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(1அ) பதிவுசெய்யப்பட்ட சந்தை இடைத்தரகர் ஒருவர், 19அ என்னும் பிரிவின்கீழ்ச் சந்தை இடைத்தரகராகப் பதிவுசெய்யப்படுவதற்கான அல்லது பதிவைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்தில் ஏலவே கொடுத்துதவப்பட்ட எவையேனும் விபரங்களைத் திருத்துவதற்கு அல்லது அதில் குறித்துரைக்கப்பட்ட நிலையிலிருந்தான மாற்றமொன்றுக்கு உட்பட்டவராகுமிடத்து அல்லது உட்பட்டவராக இருப்பதற்கு முன்னங்கொண்டுள்ளவிடத்து, அத்தகைய திருத்தம் அல்லது மாற்றம் பற்றி ஆணைக்குழுவுக்கு உடனடியாகத் தெரிவித்தல் அத்தகைய பதிவு செய்யப்பட்ட சந்தை இடைத்தரகரின் கடமையாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**15.** ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றாறாம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் :—

(அ) அவ்வுட்பிரிவில் "(1) (அ) உரிமம்பெற்ற பங்குத்தொகுதி பரிவர்த்தனையொன்றில் பங்குகள் வைத்திருக்கும் ஆளெவரும்" என்ற சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "(1) உரிமம்பெற்ற பங்குத்தொகுதி பரிவர்த்தனையொன்றில் பிணையங்கள் வைத்திருக்கும் ஆளெவரும்" என்ற சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "பங்குத்தொகுதித் தரகர் அல்லது பங்குத்தொகுதி வியாபாரி எவரும்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகர், உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரி, கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்றின் உரிமம்பெற்ற முகாமைக் கம்பெனி அல்லது பதிவுசெய்யப்பட்ட சந்தை இடைத்தரகர் எவரும்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 28அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"குறித்த சில விடயங்களில் பங்குகளை நிரற்படுத்துவதற்கெதிரான தடை.

28அ. ஏதேனும் பகிரங்கக் கம்பெனியிலுள்ள பங்குகள் உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்படுவதற்கு முன்னர் எவரேனுமாளுக்குக் குறித்தொதுக்கப்படுமிடத்து, அத்தகைய ஏதேனும் கம்பெனியிலுள்ள பங்குகள் எவையும் அல்லது பங்குகளாக மாற்றப்படற்பாலனவான ஏதேனும் பிணையம், அத்தகைய நிரற்படுத்துதலுக்கு முன்னர் அந்நோக்கத்துக்காக ஆணைக்குழுவின் எழுத்திலான அங்கீகாரம் பெறப்பட்டாலொழிய, கடைசியாகச் செய்யப்பட்ட

குறித்தொதுக்கல் தேதியிலிருந்து ஓராண்டுக்காலப் பகுதியினுள் உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின்மீது நிரற்படுத்தப்படுதலாகாது."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 29அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"பிணையங்களை வழங்குதல்.

29அ. (1) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியெதுவும் அல்லது உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையில் நிரற்படுத்துதலொன்றைப் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ள பகிரங்கக் கம்பெனி எதுவும், வழங்கலானது ஆணைக்குழுவினால் அல்லது ஆணைக் குழுவினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய, எவையேனும் வழங்கல்களைச் செய்தலாகாது.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "பிணையங்களின் வழங்குகை" என்பது :—

(அ) நிரற்படுத்துதலொன்றைப் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ள ஒரு பகிரங்கக் கம்பெனி தொடர்பில், ஓர் உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனைமீதான பிணையங்களின் அறிமுகம் ஒன்று, ஒப்பப்பணத்துக்கான முறைவு ஒன்று, விற்பனைக்கான முறைவு ஒன்று, அல்லது ஏதேனும் இடுகை என்று பொருளாகும் ;

(ஆ) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி ஒன்று தொடர்பாக —

(i) பொதுமக்களுக்கான பிணையங்களின் புதிய வழங்குகைகள் அல்லது விற்பனைக்கான முறைவு ஒன்று, அத்தகைய வழங்குகைகள்

அல்லது விற்பனை புனைவுகள் பகிரங்க வழங்குகைகள் என்ற வகையாக அல்லது வேறுவகையாக அல்லது பிணையங்களின் எவையேனும் இருக்கைகளாக இருப்பினுஞ் சரி ;

(ii) பிணையங்களின் உரிமைகள் வழங்குகைகள் என்று ;

(iii) பிணையங்களின் மிகை வழங்குகைகள் என்று ;

(iv) பிணையங்களின் வழங்குகைகள் என்ற வகையான ஒழுங்குகள் பற்றிய திட்டங்கள், மீளமைப்புப் பற்றிய திட்டங்கள், கையேற்புத் திட்டங்கள், பங்குவிருப்புத் திட்டங்கள் மற்றும் சொத்துக்களைக் கொள்ளுதல் என்று,

பொருளாகும்.".

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவை நீக்குதல்.**

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31அ என்னும் பிரிவுக்கு உடன்முன்னர் III அ என்னும் பாகத்தில் காணப்படுகின்ற தலையங்கம் இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் தலையங்கம் இடப்படுகின்றது :—

**முதன்மைச் சட்டவாக்கத்தின் III அ என்னும் பாகத்திலுள்ள தலையங்கத்தை மாற்றீடு செய்தல்.**

"கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்றைத் தொழிற்படுத்துவதற்கான உரிமத்தை வழங்குதல்.".

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31அ என்னும் பிரிவு, அப்பிரிவை அச்சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 31அ என்னும் பிரிவை மீள இலக்கமிடுதல்.**

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31அ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"கூறு நம்பிக்கைப் பொறுப் பொன்றைத் தொழிற்படுத்துவதற்கான உரிமத்தை வழங்கும் நோக்கத்துக்காக இணங்கி யொழுகப்பட வேண்டிய தேவைப் பாடுகள்.

31அ. (1) (அ) நம்பிக்கைப் பொறுப்பாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழியவும் ; அத்துடன்

(ஆ) முகாமைக் கம்பெனியானது இதற்கான அட்டவணையின் IV ஆம் பாகத்தில் குறிப்பிட்டுள்ள நியதி, நிபந்தனைகளுடன் இணங்கியொழுகினாலொழியவும்,

கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்றின் தொழிற்பாட்டுக்காக இப்பாகத்தின்கீழ் உரிமமெதுவும் வழங்கப்படுதலாகாது.

(2) உரிமம் ஒன்று வழங்கப்பட்டதன் பின்னர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர், புதிய நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவரின் நியமனத்தின் மூலம் மாற்றீடு செய்யப்பட்டுள்ளவிடத்து, (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், அத்தகைய உரிமமானது, புதிய நம்பிக்கைப் பொறுப்பாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும்வரை செல்லுபடியானதாகவும் தொடர்ந்து வலுவிலிருப்பதாகவும் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 31ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**22.** பின்வரும் புதிய பிரிவானது 31அ என்னும் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஆ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :-

"நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவரின் அங்கீகாரத்தைப் பெறுதல்.

31ஆ. (1) (அ) கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளர், இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதிகளின் அல்லது ஒழுங்குவிதிகளின்

எதேனும் ஏற்பாட்டை மீறிச் செயலாற்றியுள்ளார் என ;

(ஆ) கூறு நம்பிக்கைப் பொறுப் பொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளர் நல்ல நிதி நிலைமையில் இருந்து இல்லாதொழிந்துள்ளார் என ;

(இ) கூறு நம்பிக்கைப் பொறுப் பொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளர் முறைகேடான செயலுக்காக அல்லது அதன் அலுவல்களை முகாமை செய்வதில் ஒழுங்கீனத்துக்காகக் குற்றவாளியாக இருந்தார் என,

ஆணைக்குழுவானது, திருப்திப்படுகின்றவிடத்து, அக்கூறு நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளரின் அங்கீகாரத்தை ஆணைக்குழுவானது மீளப் பெறுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் அங்கீகாரம் மீளப் பெறப்பட்டதன்மேல், நம்பிக்கைப் பொறுப்பாளர் இளைப்பாறியவராகக் கருதப்படுதல் வேண்டும். ஆனால் அத்தகைய இளைப்பாறுகையானது, ஆணைக்குழுவினால் முறையாக அங்கீகரிக்கப்பட்ட புதிய நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவர் நியமிக்கப்படும்வரை, பயன் கொண்டதாதல் ஆகாது.".

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31இ என்னும் பிரிவானது, "பிரிவு 31அ வின்கீழ்" என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "பிரிவு 31இன்கீழ்" என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31இ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஈ என்னும் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஈ என்னும் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1), (2), (3) மற்றும் (4) என்னும் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :—

"(1) ஆணைக்குழுவானது குறிப்பிட்ட கூறு நம்பிக்கைப் பொறுப்பு ஒன்றின் முகாமைக் கம்பெனி ஒன்றிற்கு வழங்கப்பட்ட உரிமத்தை —

(அ) அத்தகைய கூறு நம்பிக்கைப் பொறுப்பின் முகாமைக் கம்பெனியானது இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதிகளை அல்லது ஒழுங்குவிதிகளை மீறிச் செயலாற்றியுள்ளது என ;

(ஆ) அத்தகைய கூறு நம்பிக்கைப் பொறுப்பின் முகாமைக் கம்பெனி நல்ல நிதி நிலைமையிலிருந்து இல்லாதொழிந்துள்ளதென ;

(இ) அத்தகைய கூறு நம்பிக்கைப் பொறுப்பின் முகாமைக் கம்பெனியானது முறைக்கேடான செயலுக்காக அல்லது அதன் அலுவல்களை முகாமை செய்வதில் ஒழுங்கீனத்திற்காகக் குற்றவாளியாக உள்ளது என ;

(ஈ) அத்தகைய கூறு நம்பிக்கைப் பொறுப்பின் முகாமைக் கம்பெனியானது கூறு நம்பிக்கைப் பொறுப்பு ஒன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளரினால் கலைக்கப்பட்டுள்ளது என ; அல்லது

(உ) அத்தகைய கூறு நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் 31ஆ என்னும் பிரிவின் கீழ் ஆணைக்குழுவினால் மீளப்பெறப்பட்டு மற்றும் புதிய நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை என,

ஆணைக்குழு திருப்திப்படுமிடத்து, இல்லாதாக்குதல் வேண்டும் அல்லது இடைநிறுத்துதல் வேண்டும்.

(2) முற்போந்த உட்பிரிவின் நியதிகளின்படி குறிப்பிட்ட கூறு நம்பிக்கைப் பொறுப்பு

ஒன்று தொடர்பில் முகாமைக் கம்பெனி ஒன்றிற்கு வழங்கப்பட்ட உரிமமொன்றை இல்லாதாக்குவதற்கு முன்னர், அத்தகைய உரிமமானது ஏன் இல்லாதாக்கப்படுதலாகாது என்பதற்குக் காரணம் காட்டுவதற்கான சந்தர்ப்பமொன்று அத்தகைய முகாமைக் கம்பெனிக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

(3) குறிப்பிட்ட கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்று தொடர்பில் முகாமைக் கம்பெனி ஒன்றிற்கு வழங்கப்பட்ட உரிமம் இல்லாதாக்கப்படுமிடத்து, ஆணைக்குழுவிடம் அதனது உரிமத்தை உடனடியாக ஒப்படைப்பது அத்தகைய முகாமைக் கம்பெனியின் கடமையாதல் வேண்டும்.

(4) குறிப்பிட்ட கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்று தொடர்பிலான முகாமைக் கம்பெனி (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளை மீறியுள்ளதெனவும் அத்துடன் அத்தகைய மீறுகை பாரதூரமான தன்மைத்தானதாக இருக்கவில்லையென்று ஆணைக்குழுவினால் கருதப்படுகின்றதெனவும் ஆணைக்குழு திருப்திப்படுமிடத்து, அது (1) ஆம் உட்பிரிவின்கீழ்ச் செயலாற்றுவதற்குப் பதிலாக —

(அ) அத்தகைய மீறுகையிலிருந்து விளைகின்ற நிபந்தனையை நிவாரித்திசெய்வதற்கு அல்லது சரிப்படுத்துவதற்கு ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியுடன் அல்லது ஒழுங்கு விதியுடன் இணங்கியொழுகுவதற்கு அல்லது அத்தகைய மீறுகையைத் தொடர்ந்து புரியாதிருப்பதற்கு,

தேவையானதென ஆணைக்குழு கருதக்கூடியவாறான எந்த நடவடிக்கையையும் எடுக்கும்

படி அத்தகைய முகாமைக் கம்பெனியைப் பணிக்கலாம்." ;

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "நம்பிக்கைப் பொறுப்பாளரொருவருக்கு அல்லது முகாமைக் கம்பெனியொன்றுக்குப்" அத்துடன் "நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு அல்லது முகாமைக் கம்பெனிக்கெதிராக" என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே "முகாமைக் கம்பெனியொன்றுக்குப்" அத்துடன் "முகாமைக் கம்பெனிக்கெதிராக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் ஓரக்குறிப்புக்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன் மூலமும் :—

"முகாமைக் கம்பெனி ஒன்றுக்கு வழங்கப்பட்ட உரிமமொன்றை இல்லாதாக்குதல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31உ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31உ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் :—

"(1) (அ) 31இ என்னும் பிரிவின் கீழ் உரிமமொன்றை வழங்கமறுக்கின்ற ; அல்லது

(ஆ) 31ஈ என்னும் பிரிவின் கீழ் உரிமமொன்றை இல்லாதாக்குகின்ற அல்லது இடைநிறுத்துகின்ற,

ஆணைக்குழுவின் முடிவொன்றினால் இன்னலுறுகின்ற ஆளெவரும், அத்தகைய ஆளுக்கு அம்முடிபானது அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களினுள் அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்." ;

(2) அப்பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிடுவதன்மூலமும் ;

(3) அப்பிரிவின் (4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளை அதன் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளாக மீள இலக்கமிடுவதன்மூலமும்; அத்துடன்

(4) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (3) ஆம் உட்பிரிவில் "அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் முடிவை" என்ற சொற்களுக்குப் பதிலாக "ஆணைக்குழுவின் முடிவை" என்ற சொற்களை இடுவதன்மூலமும்.

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31அ என்னும் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "உரிமம்பெற்ற கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்றின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்று தொடர்பிலான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "உரிமம்பெற்ற கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்றின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்றின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**27.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31எ என்னும் பிரிவானது, அப்பிரிவில் "ஆளொருவர்", "தமது" அத்துடன் "ஆளின்" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களில் எல்லாம், முறையே "முகாமைக் கம்பெனியொன்று", "அதனது" அத்துடன் "முகாமைக் கம்பெனியின்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31எ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஏ என்னும் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஏ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.

"கூறு நம்பிக்கைப் பொறுப்பு" என்ற சொற்களைப் பயன்படுத்துதல் மீதான மட்டுப்பாடு.

31ஏ. ஆளெவரும், 31அ என்னும் பிரிவின் கீழ் அத்தகைய கூறு நம்பிக்கைப் பொறுப்பை நடாத்துவதற்கு அவருக்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்தாலொழிய, "கூறு நம்பிக்கைப் பொறுப்பு" என்னும் சொற்களைப் பயன்படுத்துதல் ஆகாது.".

**29.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஐ என்னும் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஐ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.

"கூறு நம்பிக்கைப் பொறுப்பில் முதலீட்டைக் கோருகின்ற விளம்பரங்களை வழங்குவதன் மீதான மட்டுப்பாடு.

31ஐ. ஆளெவரும், அத்தகைய கூறு நம்பிக்கைப் பொறுப்பின் முகாமைக் கம்பெனியாக அத்தகைய ஆள் உரிமமளிக்கப்பட்டிருந்தாலன்றியும் அத்துடன் அத்தகைய விளக்கமளிக்கும் நினைவுக்குறிப்பின் அல்லது விளம்பரத்தின் உள்ளடக்கங்களுக்கும் அதன் வழங்கலுக்கும் வெளியிடுதலுக்கும் ஆணைக்குழுவின் முன்னங்கீகாரத்தைப் பெற்றிருந்தாலொழியவும், கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்றின் கூறுகளில் முதலீடு செய்யுமாறு பொதுமக்களைக் கோருகின்ற விளக்கமளிக்கும் நினைவுக்குறிப்பொன்றை அல்லது விளம்பரத்தை

வழங்குதலோ அல்லது வெளியிடுதலோ அல்லது வழங்கப்படுவித்தலோ அல்லது வெளியிடப் படுவித்தலோ ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31இ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31இ என்னும் பிரிவானது "உரிமம்பெற்ற கூறு நம்பிக்கைப் பொறுப்பின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கூறு நம்பிக்கைப் பொறுப்பின்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 33அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், அது அச்சட்டவாக்கத்தில் 33அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :

"இப்பாகத்தின் கீழான தவறுகள்.

33அ. இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுகின்றவரான ஆள் எவரும், தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் பத்து இலட்சம் ரூபாவிற்குக் குறையாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் ஐந்து ஆண்டு களை விஞ்சாததுமான காலப்பகுதியொன்றிற் கான இருவகையிலொருவகை மறியற்றண் டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாத லும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**32.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவானது, அதற்கான (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில்,

"அவ்வாறு வகித்தால் மட்டுமே கம்பெனியொன்றுடன் தொடர்புடையவராயிருக்கின்றார்." என்ற சொற்களுக்குப் பதிலாக "அவ்வாறு வகித்தால் ; அல்லது" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் —

"(இ) வெளியிடப்படாத விலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் தகவல் என அவர் அறிந்துள்ளதும் மற்றும் தமது கடமைகளைப் புரிகையில் தவிர தான் வெளியிடக் கூடாதென அவரிடம் நியாயமாக எதிர்பார்க்கக் கூடியமான நிரற்படுத்தப்பட்ட பிணையங்கள்

தொடர்பான தகவலை அவர் பெறும் வாய்ப்பைக் கொண்டிருப்பாராயின்,

மட்டுமே கம்பெனியொன்றுடன் தொடர்புடையவராயிருக்கின்றார்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**33.** ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "15 ஆம், 20 ஆம் அத்துடன் 31ஆ என்ற" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கு பதிலாக, "15, 19அ, 20 அத்துடன் 31ஆ என்னும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**34.** ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "உரிமம்பெற்ற பங்குத் தொகுதித் தரகரொருவர் அல்லது உரிமம்பெற்ற பங்குத் தொகுதி வியாபாரியொருவர் அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறுகின்றமையால் எழுவதான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எவரேனும் உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகர் அல்லது உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரி அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்ற இயலாதவராகக் காணப்படுவதன் விளைவாக எழுவதான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், —

(அ) "பணத்தொகைகள்." என்னும் சொல்லுக்குப் பதிலாக, "பணத்தொகைகள் ;" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அதன் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(இ) பிரிவு 14ஆ என்பதன்கீழ்த் தீர்வை நிதியத்திலிருந்து வரவுவைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பணத் தொகைகளும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**35.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "உரிமம்பெற்ற பங்குத் தொகுதித் தரகர் ஒருவர் அல்லது உரிமம்பெற்ற பங்குத் தொகுதி வியாபாரி ஒருவர் அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறியமை காரணமாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எவரேனும் உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகர் அல்லது எவரேனும் உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரி அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்ற இயலாதவராகக் காணப்படுவதன் விளைவாக" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**36.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது :—

"ஆவணங்களைக் காண்பித்தலும் தகவலை வெளியிடுதலும்.

45. (1) ஆணைக்குழு அல்லது ஆணைக்குழுவினால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், எவரேனும் ஆளை எழுத்திலான அறிவித்தல்மூலம், அறிவித்தலில் குறித்துரைக்கப் படவேண்டிய அத்தகைய காலப்பகுதிக்குள், இச் சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களை முறையாகப் பிரயோகிப்பதற்கு அல்லது அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானதென ஆணைக்குழு கருதக்கூடியவாறானதும் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படவேண்டியதானதுமான ஏதேனும் வரி விதிப்பனவு செய்வதற்கும் அளவீடு செய்வதற்கும் ஏற்பாடுசெய்கின்றதான, (ஏதேனும் சட்டத்தின்கீழ் வெளியிடுவதிலிருந்து அல்லது காண்பிக்கப்படுவதிலிருந்து தடைசெய்யப்பட்ட ஏதேனும் தகவல் அல்லது ஆவணம் தவிர்ந்த) ஏதேனும் தகவலைக் கொடுத்துதவுமாறு அல்லது ஏதேனும் ஆவணத்தைக் காண்பிக்குமாறு தேவைப்படுத்தலாம்.

(2) ஏதேனும் சட்டத்தில் முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலப் பகுதியினுள் அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அறிவித்தலொன்றைப் பெறுகின்றவரான எவரேனும், ஆளின் கடமையாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அறிவித்தலுடன் இணங்கியொழுகுகையில், ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ்

வெளிவிடுவதிலிருந்து அவர் தடை செய்யப் பட்டிருப்பதான ஏதேனும் தகவலை அத்தகைய ஆள் வெளிவிடுகின்றவிடத்து அல்லது ஏதேனும் ஆவணத்தைக் காண்பிக்கின்றவிடத்து, அத்தகைய வெளிவிடுகை அல்லது காண்பிப்பு, அத்தகைய வேறு எழுத்திலான சட்டத்தில் முரணாகவுள்ளது, எது எப்படியிருப்பினும், அத்தகைய வேறு எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின் முரண்பாடொன்றாகக் கருதப்படுதலாகாது.

(3) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றுடன் இணங்குகையில் கொடுத்துதவப் பட்ட தகவல் எதுவும் அல்லது காண்பிக்கப்பட்ட ஆவணமொன்றின் உள்ளடக்கங்கள் எவையும், விடயத்திற்கேற்றாற்போன்று அத்தகைய தகவலைக் கொடுத்துதவுகின்ற அல்லது அத்தகைய ஆவணத்தைக் காண்பிக்கின்ற ஆளின் சம்மதத்துடனன்றி அல்லது ஆணைக்குழுவின் பணிகளை நிறைவேற்றுகையின் போதன்றி, ஆணைக்குழுவினால் வேறு எவரேனும் ஆளுக்கு வெளியிடப் படுதலோ அல்லது தெரிவிக்கப்படுதலோ ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**37.** ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றோராம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1), (2) மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :—

"(1) ஆணைக்குழுவானது பின்வருவனவற்றைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கென ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றைத் தாபிக்கலாம் :—

(அ) உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை ஒன்றின், எவரேனும் உரிமம் பெற்ற பங்குத்தொகுதித் தரகரின் அல்லது

உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரி யின் அல்லது ஏதேனும் நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியின் அல்லது உரிமம் பெற்ற முகாமைக் கம்பெனியின் அல்லது ஏதேனும் கூறுநம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப்பொறுப்பாளரின் அல்லது பதிவுசெய்யப்பட்ட சந்தை இடைத் தரகரின் உயர்தொழில்சார் நடத்தை அல்லது செயற்பாடுகள் தொடர்பிலான எவரேனும் ஆளினால் செய்யப்படும் முறைப்பாடுகள் ;

(ஆ) உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகர் அல்லது உரிமம்பெற்ற பங்குத் தொகுதி வியாபாரி எந்த உரிமம்பெற்ற பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையின் உயர்தொழில் சார் நடத்தை அல்லது செயற்பாடுகள் தொடர்பில் அத்தகைய பங்குத் தொகுதித் தரகரினால் அல்லது பங்குத் தொகுதி வியாபாரியினால் செய்யப்படும் முறைப் பாடுகள் ;

(இ) ஆணைக்குழுவினால், அதனாற் கேட்டுத் தீர்மானிப்பதற்கென ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம்.

(2) குழுவானது எவரேனும் ஆளினால் அல்லது உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகர் ஒருவரினால் அல்லது உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரி ஒருவரினால் செய்யப்பட்ட ஏதேனும் எழுத்திலான முறைப்பாடு கிடைக்கப் பெற்றதன்மேல் அத்தகைய முறைப்பாட்டிற்கு ஆதாரமாக முன்வைக்கப்பட்ட ஆவணங்கள் அத்துடன் வேறு சான்றுகள் ஏதேனு மிருப்பின் அவற்றைப் பரிசீலனை செய்யலாம் என்பதுடன், விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை, உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகர் அல்லது உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரி அல்லது நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி அல்லது அத்தகைய கூறுநம்பிக்கைப்பொறுப்பின் உரிமம்

பெற்ற முகாமைக் கம்பெனி அல்லது பதிவுசெய்யப்பட்ட சந்தை இடைத்தரகர், இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை அல்லது விதியை அல்லது அத்தகைய உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் ஏதேனும் விதியை மீறியுள்ளதா அல்லது மீறியுள்ளாரா எனத் தீர்மானிக்கலாம். அத்தகைய தீர்மானம் எதுவும், விடயத்திற்கேற்றவாறு அத்தகைய உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனைக்கு, உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகருக்கு, அல்லது உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரிக்கு, அல்லது நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனிக்கு, அத்தகைய முகாமைக் கம்பெனிக்கு அல்லது அத்தகைய சந்தை இடைத்தரகருக்கு தம் பக்கம் உரைப்பதற்கான சந்தர்ப்பமொன்றை அளிக்காது எடுக்கப்படுதலாகாது.

(3) குழுவானது, விடயத்திற்கேற்றவாறு உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்று, உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகர், உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதி வியாபாரி, ஒரு நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி, உரிமம்பெற்ற முகாமைக் கம்பெனி அல்லது ஏதேனும் கூறுநம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது பதிவுசெய்யப்பட்ட ஒரு சந்தை இடைத்தரகர் இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை அல்லது விதியை மீறியுள்ளது அல்லது மீறியுள்ளார் என அல்லது அத்தகைய உரிமம்பெற்ற பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையின் ஏதேனும் விதியை மீறியுள்ளது அல்லது மீறியுள்ளார் எனத் தீர்மானிக்கின்ற விடத்து, விடயத்துக்கேற்றவாறு அத்தகைய உரிமம் பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனைக்கு, உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகருக்கு, உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரிக்கு, நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனிக்கு, முகாமைக் கம்பெனிக்கு அல்லது நம்பிக்கைப் பொறுப்

பாளருக்கு அல்லது சந்தை இடைத்தரகருக்கு எதிராக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கையின் தன்மைபற்றி ஆணைக்குழுவுக்கு விதந்துரைத்தல் வேண்டும். ஆணைக்குழுவானது ஒன்றில் அத்தகைய விதப்புரைகளுக்குப் பயன்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கான அல்லது கருமத்தை மேலும் புலனாய்வு செய்வதற்காகத் தேவையான அதிகாரசபைக்கு ஆற்றுப்படுத்துவதற்கான தற்றுணிபைக் கொண்டிருத்தல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்—

"(3அ) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், குழுவானது, ஆணைக்குழுவினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தையிட்டு விசாரணை செய்வதற்குத் தத்துவம் கொண்டதாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய விசாரணை முடிவுற்றதன்மேல் அத்தகைய கருமம் தொடர்பில் எடுக்கப்படக் கூடிய நடவடிக்கையின் தன்மைபற்றி ஆணைக்குழுவுக்கு விதந்துரைத்தலும் வேண்டும்."; அத்துடன்

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "(3) ஆம் உட்பிரிவின் கீழ்" என்னும் சொற்களுக்கும் இலக்கத்திற்கும் பதிலாக, "விடயத்துக்கேற்றவாறு (3) ஆம் அல்லது (3அ) என்னும் உட்பிரிவின் கீழ்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 46அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**38.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அது அச் சட்டவாக்கத்தின் 46அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :—

விசாரணை மற்றும் புலனாய்வு களும்.

46அ. (1) ஆணைக்குழு அல்லது ஆணைக்குழுவினால் அதன் சார்பில் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், இச்சட்டத்தின் கீழான ஆணைக்குழுவின் தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு அவசியமானதென அல்லது உசிதமானதென அது அல்லது அவர் கருதக்கூடியவாறான அத்தகைய புலனாய்வுகளைக் கொண்டுநடாத்தலாம் அல்லது அத்தகைய விசாரணைகளை நடாத்தலாம் என்பதுடன், அத்தகைய நோக்கத்திற்காக எவரேனும் ஆளை அதன் முன் அல்லது அவர் முன் தோன்றி சாட்சி அளிக்குமாறு அல்லது அத்தகைய புலனாய்வு அல்லது விசாரணையின் நோக்கத்திற்காகத் தேவைப்படக்கூடியவாறான, அத்தகைய ஆளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள ஏதேனும் புத்தகங்களை அல்லது ஆவணங்களைக் காண்பிக்குமாறு அழைக்கலாம் அத்துடன் கட்டளையிட்டழைக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ்ப் புலனாய்வு அல்லது விசாரணை ஒன்றைக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்காக, ஆணைக்குழுவானது, உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை ஒன்றின், எவரேனும் உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகரின் எவரேனும் உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரியின் ஏதேனும் நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியின் ஏதேனும் கூறு நம்பிக்கைப்பொறுப்பின் உரிமம்பெற்ற முகாமைக் கம்பெனி ஒன்றின் அல்லது பதிவு செய்யப்பட்ட ஒரு சந்தை இடைத்தரகரின் ஏதேனும் வளவுகளினுள், நாளின் நியாயமான எல்லா நேரங்களிலும் உட்புகுவதற்கும் அத்துடன், இச்சட்டத்தின்கீழ் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் அல்லது விதியின்கீழ் வைத்திருக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ள எவையேனும் பதிவேடுகளைப் பரிசோதிப்பதற்கும் அவற்றைப் பிரதிகள் எடுப்பதற்கும் என எவரேனும் அலுவலருக்கு எழுத்தில் அதிகாரமளிக்கலாம்.

(3) ஆணைக்குழுவின் முன் தோன்றுமாறு அழைக்கப்பட்டுள்ள அல்லது கட்டளையிட்டழைக்கப்பட்டுள்ள ஆள் எவரும் அல்லது (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் சார்பில் முறையாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஆள் எவரும், வாய் மூலமாகப் பரிசோதிக்கப்படலாம் என்பதுடன், அவ்வாறு பரிசோதிக்கப்பட்ட ஆளினால் செய்யப்பட்ட கூற்று எதுவும் எழுத்தில் இடப்படலாம். எழுத்தில் இடப்பட்ட அத்தகைய ஒவ்வொரு கூற்றும் அவ்வாறு பரிசோதிக்கப்பட்ட ஆளினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்குக் கையொப்பமிடுவதற்கு முன்னர் கூற்றானது அத்தகைய ஆளுக்குக் காட்டப்படுதல் அல்லது வாசித்துக் காட்டப்படுதல் வேண்டும் அல்லது அது எழுதப்பட்டுள்ள மொழி அவருக்கு விளங்காததாயிருந்தால், அவர் விளங்கக்கூடியதான ஒரு மொழியில் அவருக்கு மொழிபெயர்த்துக் கூறப்படுதல் வேண்டுமென்பதுடன், அதனை விளக்குவதற்கு அல்லது அதற்குச் சேர்ப்பதற்கு அவர் சுதந்திர முடையவராக இருத்தலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்படும்போது, விடயத்திற்கேற்றவாறு போன்று ஆணைக்குழுவின் முன் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளின்முன் தோன்றத் தவறியவரான ஆள் ஒவ்வொருவரும் அல்லது ஆணைக்குழுவினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் அவரிடம் கேட்கப்பட்ட ஏதேனும் கேள்விக்கு விடையளிக்க மறுக்கின்ற அல்லது ஆணைக்குழுவினால் அல்லது ஆணைக்குழுவினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒருவர் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தும்போது, அவரது உடைமையில் உள்ள ஏதேனும் புத்தகத்தை அல்லது ஆவணத்தைக் காண்பிக்க மறுக்கின்ற அல்லது ஆணைக்குழுவினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் அவரிடம் கேட்கப்பட்ட ஏதேனும் வினாவுக்கு அறிந்து கொண்டே ஏதேனும்

பிழையான விடையை அளிக்கின்ற ஆள் எவரும், இச்சட்டத்தின் கீழ், தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதவானொருவரினால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதி ஒன்றிற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது பத்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்.

39. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவானது, "தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்படவும் அதன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தண்டனைச் சட்டக்கோவையினதும் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினதும் கருத்தெல்லைக்குட்படவும் அவற்றின்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 50அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

40. முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது, அச்சட்டவாக்கத்தின் 50அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"ஆணைக்குழுவின் உறுப்பினரைப் பயமுறுத்துதல், அச்சுறுத்துதல் அல்லது அவதூறு செய்தல் முதலியன

50அ. ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர், பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது ஆணைக்குழுவின் வேறு எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் இச்சட்டத்தின் கீழ் அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் அல்லது விதியின் கீழ் அவரது கடமைகளை ஆற்றும்போது, அவரை —

(அ) பயமுறுத்துகின்ற அல்லது அச்சுறுத்துகின்ற ; அல்லது

(ஆ) அவருக்கு அவமரியாதையை ஏற்படுத்தும் அல்லது அவரது மதிப்புக்கு அவதூறு விளைவிக்கும் நோக்குடன் எவையேனும் மதிப்பைக் குறைக்கின்றவையான வார்த்தைகளைக் கூறுகின்ற அல்லது ஏதேனும் கூற்றை வெளியிடுகின்ற,

ஆளெவரும் அல்லது ஆட்கள் குழு எதுவும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு, அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப் பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**41.** ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றோராம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

“(ஆ) அவரது அறிவுக்கெட்டியவரை உண்மையற்றதாக, செம்மையற்றதாக அல்லது தவறாக இட்டுச்செல்லுகின்றதாக உள்ள ஏதேனும் தகவலை அல்லது அவரது அறிவுக்கெட்டியவரை உண்மையற்றதும், செம்மையற்றதும் அல்லது தவறாக இட்டுச்செல்லுகின்றதுமான உள்ளடக்கங்களைக் கொண்டுள்ள ஏதேனும் விவரத்திரட்டை, ஆவணத்தை அல்லது கூற்றை, இச்சட்டத்தின் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் அல்லது ஏதேனும் விதியின் நோக்கங்களுக்காகக் கொடுக்கின்ற அல்லது காண்பிக்கின்ற ; அல்லது” ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "நீதிவானொருவர்" என்பது தொடங்கி "ஒருகோடி ரூபாவை விஞ்சாததொரு" என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "நீதிவானொருவரால் சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐந்து வருடங்களை விஞ்சாதவொரு காலப் பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு, அல்லது ஐம்பதினாயிரம் ரூபாவிற்குக் குறையாததும் ஒருகோடி ரூபாவை விஞ்சாததுமான வொரு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(3) இச்சட்டத்தின்கீழான தவறு எதுவும் கூட்டிணைக்கப்பட்டுள்ள குழுவொன்றினால் புரியப்பட்டுள்ளவிடத்து, தவறுபுரியப்பட்ட நேரத்தில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர், முகாமையாளர், செயலாளர் அல்லது வேறு அதையொத்த அலுவலர் ஆக இருந்த ஆள் எவரும் அத்தகைய தவறானது அவரது அறிவுக்கெட்டாமல் அல்லது மறைமுக ஆதரவு இன்றிப் புரியப்பட்டது எனவும் அல்லது அவரின் பணிகளின் தன்மையையும் விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்திற் கொண்டு அவர் பிரயோகித்திருக்கவேண்டிய வாறான எல்லா விழிப்புக் கவனத்தையும் அத்தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்குப் பிரயோகித்துள்ளார் எனவும் எண்பித்தாலன்றி, அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**42.** ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றோராம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(அ) உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையில் பிணையங்களை நிரற்படுத்துதலும், வியாபாரம் செய்தலும் மற்றும் நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனிகளால் உரிமைகள் வழங்குகை என்ற வகையில் அல்லது பிரிகை வழங்குகை என்ற வகையில் அல்லது வேறுவகையாக எவையேனும் மேலதிக பிணையங்களின் பின்னரான வழங்குதலும்;";

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "பங்குத் கொடுக்கல் வாங்கல் பற்றியும் அத்துடன் உரிமமளிக்கப்பட்ட கூறுநம்பிக்கைப்பொறுப்பொன்றில் உள்ள கூறுகள் தொடர்பிலான கொடுக்கல் வாங்கல் பற்றியும் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதித் தரகர்களாலும் பங்குத்தொகுதி வியாபாரிகளாலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பிணையங்களின் கொடுக்கல் வாங்கல் பற்றியும் அத்துடன் கூறு நம்பிக்கைப்பொறுப்பொன்றில் உள்ள கூறுகள் தொடர்பிலான கொடுக்கல் வாங்கல் பற்றியும் உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகர்களாலும் உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரிகளாலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(இ) உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை ஒன்றினால், உரிமம்பெற்ற பங்குத் தொகுதித் தரகரினால், உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரியினால் அல்லது கூறு நம்பிக்கைப்பொறுப் பொன்றின் உரிமம்பெற்ற முகாமைக் கம்பெனியினால் அல்லது பதிவுசெய்யப்பட்ட சந்தை இடைத்தரகரினால் புத்தகங்கள், பதிவேடுகள், கணக்குகள் ஆகியன முறையாகப் பேணிவைப்படுதலும் கணக்காய்வுகள் செய்யப்படுதலும் அத்துடன் அத்தகைய உரிமம்பெற்ற பங்குத் தொகுதிப் பரிவர்த்தனை உரிமம்பெற்ற பங்குத் தொகுதித் தரகர், உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரி அல்லது உரிமம்பெற்ற முகாமைக் கம்பெனி அல்லது பதிவுசெய்யப்பட்ட சந்தை இடைத்தரகர் அவர்களது அலுவல்கள் பற்றி ஆணைக்குழுவுக்குக் கிரமமாக அறிக்கையிடுதலும் ;";

(4) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதித் தரகராலும், பங்குத்தொகுதி வியாபாரியாலும், உரிமமளிக்கப்பட்ட கூறு நம்பிக்கைப்பொறுப்பொன்றின் முகாமைக் கம்பெனியாலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகராலும், உரிமம்பெற்ற முகாமைக் கம்பெனியாலும், பதிவுசெய்யப்பட்ட சந்தை இடைத்தரகர் ஒருவராலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(5) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஊ) கூறு நம்பிக்கைப்பொறுப்பு ஒன்றின் நம்பிக்கைப்பொறுப்பாளரினாலும் உரிமம்பெற்ற முகாமைக் கம்பெனியாலும் பின்பற்றப்பட வேண்டிய ஒழுக்கக்கோவை ஒன்று ;";

(6) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியில், ".அக்கருமங்கள்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, ".அக்கருமங்கள் ;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(7) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(ஏ) மூலதனத் தேவைப்பாடுகள், பணியாட்டொகுதியினரின் தகைமைகள், பதிவேடு வைத்திருத்தல் மற்றும் வேறு ஆவண முறைமைகள் என்பன உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகர்களாலும், உரிமம்பெற்ற பங்குத் தொகுதி வியாபாரிகளாலும், கூறுநம்பிக்கைப் பொறுப்பொன்றின் உரிமம்பெற்ற முகாமைக் கம்பெனிகளாலும், பதிவுசெய்யப்பட்ட சந்தை இடைத்தரகர்களாலும் பின்பற்றப்படுதல் ;

(ஐ) உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை, உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகர், உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரி, கூறுநம்பிக்கைப் பொறுப்பு ஒன்றின் உரிமம்பெற்ற முகாமைக் கம்பெனி, பதிவுசெய்யப்பட்ட சந்தை இடைத்தரகர் அல்லது நிரற்படுத்தப்பட்ட ஒரு பகிரங்கக் கம்பெனி அல்லது நிரற்படுத்தலுக்கு விண்ணப்பித்துள்ள ஒரு பகிரங்கக் கம்பெனி என்பவற்றால் வழங்கப்படவேண்டுமென உத்தேசிக்கப்பட்டுள்ள விளம்பரங்களின் படிவமும் உள்ளடக்கங்களும் மற்றும் அத்தகைய விளம்பரங்களில் அடங்கியிருக்க வேண்டிய தகவலும் ;

(ஒ) உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகர், உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரி அல்லது ஒரு பதிவுசெய்யப்பட்ட சந்தை இடைத்தரகர் என்போரினால் விளிம்புக் கணக்கில் பிணையங்களைத் தொழிற்படுத்துதல்;

(ஓ) நிரற்படுத்தப்பட்ட பிணையங்கள் தொடர்பில் பதிவுசெய்யப்பட்ட சந்தை இடைத்தரகர்களின் தொழில் அலுவல்களும் நடவடிக்கைகளும் ;

(ஔ) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனிகளினால் வெளிவிடுதலும், அறிக்கையிடுதலும் மற்றும் தகவல் அளித்தலும் ;

(க) உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனைக்குச் செய்யப்பட்ட நிரற்படுத்தலுக்கான விண்ணப்பங்களை நிராகரித்தலும், உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின்பாலான நிரற்படுத்தல்களை இடைநிறுத்தலும் இல்லாதாக்குதலும் ; அத்துடன்

(ந) பங்குத்தொகுதிக் கடன்கொடுப்போரினதும் பங்குத்தொகுதிக் கடன்பெறுநோரினதும் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல்.".

43. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) "தொடர்புடைய ஆள்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்திற்கு நேர்முன்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும் :—

"விளம்பரம்" என்பது எதேனும் வெளியீட்டில் செய்யப்பட்ட விளம்பரத்தை அல்லது அறிவித்தல்களை, சைகைகளை, அல்லது சுட்டுத்துண்டுகளை வெளிக்காட்டுவதன் மூலம் அல்லது சுற்றறிக்கைகள், விவரக் கொத்துகள், விலைப்பட்டியல்கள் அல்லது வேறு ஆவணங்கள் மூலம் அல்லது படங்களை வெளிக்காட்டி வைப்பதன் மூலம், அல்லது புகைப்படங்களை அல்லது சினிமாப்படங்களை வெளிக்காட்டி வைப்பதன் மூலம் அல்லது ஒலிபரப்பு மூலம் அல்லது தொலைக்காட்சி மூலம் அல்லது பதிவு நாடாக்களை விநியோகிப்பதன் மூலம் அல்லது இதையொத்த வேறேதேனும் முறையில் செய்யப்படும் விளம்பரத்தை உள்ளடக்கும் ;

"உரிமை வழங்குகை" என்பது நிரற்படுத்தப்பட்ட ஒரு பகிரங்கக் கம்பனியில் தற்போது பிணையங்களை வைத்திருப்போருக்கு எதிர்காலத்தில் வழங்கப்படவுள்ள எதேனும் பிணையத்தின் அல்லது பிணையங்களின் கொடைமுனைவு என்று பொருள்படும். அத்தகைய கொடைமுனைவு விவரிக்கப்படுதல் அல்லது குறிப்பீடு செய்யப்படுதல்

எவ்வாறாயினும் சரி அத்தகைய கொள்வனவானது பிரதிபயன் இல்லாமலும் மற்றும் அத்தகைய கொள்வனவுத் திகதியில் அத்தகைய கம்பெனியில் அவர்களால் வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் விகிதசாரத்திற்கு ஏற்பவும் செய்யப்படுதல் வேண்டும்.;

(2) "தொடர்புடைய ஆள்" என்னும் சொல்லொட்டின் வரைவிலக்கணத்தில் —

(அ) "அல்லது முகாமைக் கம்பெனி தொடர்பில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அல்லது உரிமம்பெற்ற முகாமைக்கம்பெனி தொடர்பில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அதன் (அ) என்னும் பந்தியில் "அல்லது முகாமைக் கம்பெனி" அத்துடன் "அல்லது முகாமைக் கம்பெனியின்" என்ற சொற்களுக்குப் பதிலாக முறையே "அல்லது உரிமம் பெற்ற முகாமைக் கம்பெனி" அத்துடன் "அல்லது உரிமம்பெற்ற முகாமைக் கம்பெனியின்" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(இ) அதன் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஆ) அதன் சாதாரண மூலதனத்தின் விதித்துரைக்கப்பட்ட நூற்றுவீதம் அல்லது அதற்கு மேலானது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நம்பிக்கைப் பொறுப்புக் கம்பெனியினாலும் உரிமம்பெற்ற முகாமைக்

கம்பெனியினாலும் ஒன்றாகச் சொந்தமாக வைத்திருக்கப்படுகின்ற அல்லது மொத்த வாக்குகளில் விதித்துரைக்கப்பட்ட ஒரு நூற்று வீதத்திலானவை அல்லது அதிலும் கூடுதலானவை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நம்பிக்கைப் பொறுப்புக் கம்பெனியினாலும் உரிமம்பெற்ற முகாமைக் கம்பெனியினாலும் பிரயோகிக்கப்படுகின்றதுமான ஒரு கம்பெனி" ;

(ஈ) அதன் (இ) என்னும் பந்திக்கும் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் :—

"(இ) நம்பிக்கைப் பொறுப்பாளரின், கூறு நம்பிக்கைப்பொறுப்பு ஒன்றின் உரிமம்பெற்ற முகாமைக் கம்பெனியின் அல்லது (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனி ஒன்றின் பணியாளர் ஒருவர் அல்லது அலுவலர் ஒருவர் ;";

(3) "தொடர்புடைய ஆள்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும் :—

"கடன் மதிப்பீட்டு முகவர் நிலையம்" என்பது அவற்றின் வழங்குநர்கள்மீது விதிக்கப்படும் எவையேனும் கடப்பாடுகளைப் புரிவதற்கு வழங்குநர்களுக்கு உள்ள திறமையைக் குறிப்பாகக் கருத்திற்கொண்டு, நிரற்படுத்தப்பட்ட பிணையங்களின் அல்லது நிரற்படுத்தப்படவுள்ள பிணையங்களின் ஏதேனும் வழங்கீட்டின் கடன் தீர் நிலையினை மதிப்பீடுசெய்து மீளாய்வு செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆளொருவர் என்று பொருளாகும்." ;

"முதலீட்டு முகாமையாளர்" என்பது, முதலீட்டாளர் ஒருவர் சார்பில் நிரற்படுத்தப்பட்ட பிணையங்களின் வைத்திருப்பனை முகாமை செய்யும் தொழிலில் அல்லது நிரற்படுத்தப்பட்ட பிணையங்களில் முதலீடு செய்வதில், கொள்வனவு செய்வதில் அல்லது விற்பனை செய்வதில் உள்ள அனுகூலங்கள் பற்றி எவரேனும் ஆளுக்கு அறிவுரை கூறுவதில் ஈடுபட்டிருக்கின்ற அல்லது தொழிலாக ஈடுபட்டுள்ள ஆள் ஒருவர் எனப் பொருளாகும். ஆனால், அலகு நம்பிக்கைப் பொறுப்பொன்றின் உரிமம்பெற்ற முகாமைக் கம்பெனியை உள்ளடக்கமாட்டாது ;";

(4) "நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி" என்னும் சொற்றொடரின் வரைவிலக்கணத்தையும் "நிரற்படுத்தப்பட்ட பிணையங்கள்" என்னும் சொற்றொடரின் வரைவிலக்கணத்தையும் நீக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணங்களை இடுவதன் மூலமும் :—

"நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி" என்பது, எந்தப் பகிரங்கக் கம்பெனி, அதாவது, பிணையங்களை உரிமம்பெற்ற பங்குத் தொகுதி பரிவர்த்தனை ஒன்றில் நிரற்படுத்தப்பட்டு அல்லது விலைக்கோரப்பட்டு வைத்திருக்கின்றதோ அந்த ஏதேனும் பகிரங்கக் கம்பெனி எனப் பொருள்படும், அத்துடன் பின்வருவனவற்றையும் உள்ளடக்கும் :—

(அ) அதாவது, பிணையங்களை உரிமம் பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை ஒன்றில் நிரற்படுத்தி வைத்திருக்கின்ற ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனம் ; அத்துடன்

(ஆ) அதாவது, (பங்குகள் அல்லாத) பிணையங்களை உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை ஒன்றில் நிரற்படுத்தி வைத்திருக்கின்ற ஏதேனும் தனியார் கம்பெனி ;

"நிரற்படுத்தப்பட்ட பிணையங்கள்" என்பது உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை ஒன்றில் நிரற்படுத்தப்பட்ட எவையேனும் பிணையங்கள் எனப் பொருள்படும் ;";

(5) "முகாமைக் கம்பெனி" என்னும் சொல்லுரையின் வரைவிலக்கணத்தில் "உரிமமளிக்கப்பட்ட கூறுநம்பிக்கைப் பொறுப்பொன்று தொடர்பில்" என்ற சொற்களுக்குப் பதிலாக "கூறுநம்பிக்கைப் பொறுப்பொன்று தொடர்பில்" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(6) "முகாமைக் கம்பெனி" என்னும் சொல்லுரையின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களைச் சேர்ப்பதன் மூலமும் :—

"விளிம்புக் கணக்கு" என்பது தரகரின் கடனுக்காகப் பொதுவாகப் பிணையங்களைப் பிணைப் பொறுப்பாகக் கொடுத்துப் பிணையங்களை வாங்குவதற்கு அல்லது விற்பதற்கு முதலீட்டாளரொருவரை அனுமதிக்கின்ற தரகுக் கணக்கு என்று பொருள்படும்;

"கடன்வசதி அளிப்பவர்" என்பது நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி ஒன்றின் பிணையங்களை கொள்வனவு செய்வதற்கு முதலீட்டாளர்களுக்கு கடன் வழங்குகின்ற தொழிலில் இருக்கின்ற ஆள் ஒருவர் என்று பொருள்படும் ;

"சந்தை இடைத்தரகர்" என்பது விற்கப்படாத பங்குகளை வாங்குபவரையும், கடன்வசதி அளிப்பவர் ஒருவரையும், கடன் மதிப்பீட்டு முகவர் ஒருவரையும், முதலீட்டு முகாமையாளர் ஒருவரையும் அத்துடன் தீர்வையகத்தில் வைப்புச்செய்யப்பட்ட எல்லாப் பிணையங்களையும் கையாள்வதற்குப் பொறுப்பாக இருப்பதும் அத்துடன் உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை ஒன்றில் பிணையங்களின் கொடுக்கல் வாங்கலின் கொடுத்துத் தீர்த்தலை இயலச்செய்தலை அனுமதிக்கும் அல்லது அதற்கு வசதிசெய்வதுமான தீர்வகமொன்றின் பணிகளைப் புரிகின்றவரான ஆள் ஒருவரையும் உள்ளடக்கும் ;

"கொடைமுனைவு" அல்லது "விற்பனைக்கு முன்வைத்தல்" என்பது முன்விபரணம் ஒன்றின் அல்லது வேறுவகை மூலமாக பெறுமதிக்காக ஏதேனும் நிரற்படுத்தப்பட்ட

பிணையங்களின் அல்லது அத்தகைய பிணையங்களைப் பொறுப்பேற்பதற்கான உரிமைகளை விற்பதற்கான அல்லது வாங்குவதற்கான ஏதேனும் முயற்சியை உள்ளடக்கும். ஆனால், அத்தகைய ஏதேனும் நிரற்படுத்தப்பட்ட பிணையங்கள் தொடர்பில் விற்கப்படாத பங்குகளை வாங்கும் உடன்படிக்கை ஒன்றைச் செய்வதற்கான நன்நோக்குடன் எவரேனும் அணுகச் செய்யப்பட்டவோர் அழைப்பை உள்ளடக்காது ;

"பகிரங்கக் கம்பெனி" என்பது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 30 ஆம் பிரிவில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறான "தனியார் கம்பெனி" ஒன்றல்லாத ஏதேனும் கம்பெனி எனப் பொருள்படும் ;

"உரிமைகள் வழங்குகை" என்பது நிரற்படுத்தப்பட்ட கம்பெனி ஒன்றில், தற்போது பிணையங்களை வைத்திருப்போருக்கு எதிர்காலத்தில் வழங்கப்படவுள்ள ஏதேனும் பிணையத்தின் அல்லது பிணையங்களின் கொடை முனைவு என்று பொருள்படும். அத்தகைய கொடை முனைவு, விளம்பரப்படுத்தல் அல்லது குறிப்பீடு செய்யப்படுதல் எவ்வாறாயினும் சரி அத்தகைய கொடை முனைவு பிரதிபயனுக்காகவும் மற்றும் அவற்றின் வழங்கலுக்கு முன்னர் அத்தகைய கொடை முனைவுத் திகதியில் அத்தகைய கம்பெனியில் அவர்களால் வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் விகிதாசாரத்திற்கு ஏற்பவும் செய்யப்படுதல் வேண்டும் ;".

(7) பங்குத் தொகுதிப் பரிவர்த்தனை" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"பங்குத்தொகுதிக் கடன்பெறுநர்" என்பது, நிரற்படுத்தப்பட்ட பிணையங்களைக் கடனாகப் பெறுகின்ற தொழிலில் ஈடுபட்டுள்ள ஆளொருவர் என்று பொருள்படும் ;

(8) "பங்குத்தொகுதி வியாபாரி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் "எனப் பொருள்

படும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எனப் பொருள்படும் ஆனால், பதிவுசெய்யப்பட்ட சந்தை இடைத்தரகர் ஒருவராக இருக்கும் விற்கப்படாத பங்குகளை வாங்குபவரொருவரை உள்ளடக்காது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(9) "பங்குத்தொகுதி வியாபாரி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் புதிய வரைவிலக்கணத்தைச் உட்புகுத்துவதன் மூலமும் :—

"பங்குத்தொகுதிக் கடன்வழங்குபவர்" என்பது நிரற்படுத்தப்பட்ட பிணையங்களைக் கடனாக வழங்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆள் ஒருவர் எனப் பொருள்படும் ;";

(10) "நம்பிக்கைப் பொறுப்பாளர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் "உரிமமளிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பொன்று தொடர்பில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கூறுநம்பிக்கைப் பொறுப்பொன்று தொடர்பில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(11) "நம்பிக்கைப்பொறுப்பாளர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

"விற்கப்படாத பங்குகளை வாங்குபவர்" என்பது, நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி ஒன்றின் அல்லது நிரற்படுத்தலுக்காக விண்ணப்பித்திருக்கும் கம்பெனி ஒன்றின் பிணையங்களின் பகிரங்க வழங்குகை ஒன்று தொடர்பில் கட்டணம் அல்லது தரகுக்காக அத்தகைய கம்பெனியின் ஒப்பமளிக்கப்படாத பிணையங்களைக் கொள்வனவு செய்வதற்கு உத்தரவாதம் அளிக்கின்றவரான அல்லது கொடை முனைவு முழுமையாக ஒப்பமளிக்கப்பட்டிருக்காத பட்சத்தில், அத்தகைய பிணையங்களை வாங்குவதற்கு அத்தகைய கம்பெனியுடன் பேரம்பேசுகின்ற எவரேனும் ஆள் எனப் பொருள்படும் என்பதுடன், கம்பெனியிடமிருந்து அத்தகைய பிணையங்களைப் பொதுமக்களுக்கு விற்பனைக்கு முன்வைக்கும் நோக்குடன் கொள்வனவு செய்கின்ற எவரேனும் ஆளையும் உள்ளடக்கும் ;".

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையைத் திருத்துதல்

**44.** ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்றாம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையானது இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(1) அவ் அட்டவணையின் பாகம் I இல் "கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுக்கு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை ஒன்றாக உரிமம் வழங்கும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுக்குப் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை ஒன்றாக உரிமம் ஒன்று வழங்கும் அத்துடன் அத்தகைய உரிமத்தைப் புதுப்பிக்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அட்டவணையின் பாகம் II இல் —

(அ) "கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக அல்லது பங்குத்தொகுதி தரகர் ஒருவராக அல்லது பங்குத் தொகுதி வியாபாரி ஒருவராக உரிமம் ஒன்று வழங்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுக்குப் பங்குத் தொகுதித் தரகர் ஒருவராக அல்லது பங்குத்தொகுதி வியாபாரி ஒருவராக உரிமம் ஒன்று வழங்கும் அத்துடன் அத்தகைய உரிமத்தைப் புதுப்பிக்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அந்தப் பாகத்தின் (ஈ) என்னும் விடயத்திற்குப் பதிலாக பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் —

"(ஈ) விலைபட்டியாரக் கம்பெனியின் சார்பில் வாடிக்கையாளர்களுடன் புழங்கவிருக்கின்ற எல்லா நிறைவேற்றுப் பணிப்பாளர்களும் ஊழியர்களும், காலத்திற்குக் காலம் உரிமம்பெற்ற பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையினாலும் ஆணைக்குழுவினாலும் முன்வைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க, உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையினால் பயிற்சி அளிக்கப்பட்டவர்களாகவிருப்பதுடன், அத்தாட்சிப்படுத்தப்பட்டவர்களாகவுமிருத்தல் வேண்டும் ;" அத்துடன்

(3) அந்த அட்டவணையின் பாகம் III இல் —

(அ) "தனியாள் ஒருவருக்குப் பங்குத்தொகுதி வியாபாரி ஒருவராக அல்லது பங்குத் தொகுதித் தரகராக உரிமம் வழங்கப் படும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தனியாள் ஒருவருக்கு பங்குத்தொகுதித் தரகர் ஒருவராக அல்லது பங்குத்தொகுதி வியாபாரி ஒருவராக உரிமம் ஒன்று வழங்கும் அத்துடன் அத்தகைய உரிமத்தைப் புதுப் பிக்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் :—

(ஆ) அப்பாகத்தின் (ஆ) என்னும் விடயத்தை உடனடுத்து பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும் —

"(ஆஆ) காலத்துக்குக்காலம் உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையினாலும் ஆணைக்குழுவினாலும் முன்வைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க, உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையினால் பயிற்சி அளிக்கப்பட்டவராகவும் அத்துடன் அத்தாட்சிப்படுத்தப் பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.".

(4) அவ் அட்டவணையின் பாகம் IV ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பாகத்தை இடுவதன் மூலமும் :—

"பாகம் IV

ஒரு கூறுநம்பிக்கைப்பொறுப்பைத் தொழிற்படுத்துவதற்கு முகாமைக் கம்பெனி ஒன்றுக்கு உரிமம் ஒன்று வழங்கும் நோக்கத்திற்காக இணங்கியொழுகப்பட வேண்டிய நியதி, நிபந்தனைகள் பின்வருவனவாகும் :—

(அ) கூறுநம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப் பாளரும் முகாமைக் கம்பெனியும் வெவ்வேறான ஆட்களாக இருத்தல் ;

(ஆ) நம்பிக்கைப்பொறுப்பாளர், முகாமைக் கம்பெனி யுடன் தொடர்புடைய ஓர் ஆளாக இல்லா திருத்தல் ;

(இ) முகாமைக் கம்பெனியானது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்ட கம்பெனி ஒன்றாக இருத்தல், அத்துடன் இது இலங்கைக்கு வெளியே முறையாகக் கூட்டிணைக்கப்பட்ட அல்லது ஏதேனும் வெளிநாட்டுடன் ஏதேனும் நியதிச் சட்டத்தினை, அரச பட்டயத்தை, உரிமைப்பேறானையைப் பின்பற்றி அமைக்கப்பட்ட கம்பெனி ஒன்றையும் உள்ளடக்கும் ;

(ஈ) அம்முகாமைக் கம்பெனியானது அவசியமான தொழில்சார் அனுபவத்தைக் கொண்டிருப்பதுடன் நிதிரீதியாக நல்ல நிலைமையிலும் இருத்தல் ;

(உ) முகாமைக் கம்பெனியின் பணிப்பாளர்கள் பொருத்தமானதும் தகுந்தவருமான ஆட்களாக இருத்தல் ;

(ஊ) விளக்கமளிக்கும் குறிப்பு ஒன்று முகாமைக் கம்பெனியினால் தயாரிக்கப்பட்டு ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருத்தல்;

(எ) நம்பிக்கைப்பொறுப்பாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருத்தல் ;

(ஏ) முகாமைக் கம்பெனிக்கும் நம்பிக்கைப் பொறுப்பை உருவாக்கும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கும் இடையிலான நம்பிக்கைப் பொறுப்பை உருவாக்குகின்ற உறுதி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருத்தல் ;

(ஐ) அந்த நம்பிக்கைப்பொறுப்பு உறுதியானது பின்வருமாறு இருத்தல் —

(i) நம்பிக்கைப்பொறுப்பு ஆதனத்தை முதலீடு செய்வதன்மீது கட்டுப்பாடுகளைத் தருவதாக ;

(ii) நம்பிக்கைப்பொறுப்பாளரின் பொறுப்புக்களைத் தருவதாக ;

(iii) அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பு உறுதியில் தரப்பட்ட சந்தர்ப்பங்கள் ஏதேனும் இருந்தால் அச்சந்தர்ப்பங்களில் தவிர, ஏதேனும் மேலதிகக் கொடுப்பனவைச் செய்யுமாறு அல்லது ஏதேனும் மேலதிகப்பொறுப்பை ஏற்குமாறு கூறு வைத்திருப்பவர்கள் தேவைப்படுத்தப்படமாட்டார்கள் என்று ஏற்பாடு செய்வதாக ;

(iv) கூறுகளின் கொள்வனவு விலையையும் மீட்பு விலையையும் கணிப்பதற்கான முறையைத் தருவதாக ;

(v) கூறுகளின் மீட்பு எச்சூழ்நிலைகளில் இடைநிறுத்தி வைக்கப்படலாமோ அச்சூழ்நிலைகளைத் தருவதாக ;

(vi) கூறுவைத்திருப்பவர்களின் இடாப்பொன்றைப் பேணுவதற்கு ஏற்பாடு செய்வதாக ;

(vii) நம்பிக்கைப்பொறுப்பாளர், முகாமைக் கம்பெனி மற்றும் அவர்களுடன் தொடர்புடைய ஆட்களும், அவர்கள் முக்கிய அக்கறை கொண்டுள்ள ஏதேனும் தொழில், நம்பிக்கைப் பொறுப்புப் பற்றிய ஏதேனும் கூட்டத்தில் விவாதிக்கப் படும்போதெல்லாம் அவர்களுடைய அக்கறையை வெளிப்படுத்துவதற்கு, தேவைப்படுத்தும் ஏற்பாடுகளைக் கொண்டிருப்பதாக ;

(viii) ஆணைக்குழுவின் விதிகளினால் குறித்துரைக்கப்பட்ட தகைமைகளைக் கொண்ட ஆட்களைக் கூறுநம்பிக்கைப் பொறுப்பின் கணக்காய்வாளர்களாக நியமனம் செய்வதற்கு ஏற்பாடு செய்வதாக அத்துடன் அத்தகைய தகைமைகளைக்

கொண்டிருப்பதை, அவர்கள் நிறுத்தும் போது, அத்தகைய கணக்காளர்களின் இளைப்பாறுதலைத் தேவைப்படுத்துவதற்கு ஆணைக்குழுவிற்குத் தத்துவமளிப்பதாக ;

(ix) புதிய ஒரு நம்பிக்கைப்பொறுப்பாளர் நியமிக்கப்படும்வரை, நம்பிக்கைப் பொறுப்பாளரை இளைப்பாறுவதிலிருந்து தடுப்பதாக ;

(x) நம்பிக்கைப்பொறுப்பாளரதும் ஆணைக்குழுவினதும் அங்கீகாரத்துடன் தவிர, நம்பிக்கைப்பொறுப்பு சார்பில் விற்கப்படாத பங்குகளை வாங்குகின்ற ஏதேனும் ஒப்பந்தத்தை அல்லது துணை ஒப்பந்தத்தைச் செய்வதிலிருந்து முகாமைக் கம்பெனியைத் தடுப்பதாக ;

(xi) நம்பிக்கைப்பொறுப்பாளரின் சம்மதத்துடன் தவிர, நம்பிக்கைப்பொறுப்பு ஆதனத்திலிருந்து கடன் கொடுத்தலை அல்லது வழங்குதலைத் தடுப்பதாக ;

(xii) முகாமைக் கம்பெனிக்கும் அல்லது முகாமைக் கம்பெனிக்குத் தொடர்புடைய எவரேனும் ஆளுக்கும், நம்பிக்கைப் பொறுப்பாளருக்கும் இடையிலான ஏதேனும் கொடுக்கல் வாங்கலுக்கு, நம்பிக்கைப் பொறுப்பாளரின் எழுத்திலான அங்கீகாரத்திற்கு ஏற்பாடு செய்வதாக ;

(xiii) முறையாக உருவாக்கப்பட்ட ஏதேனும் கூறுகள் தொடர்பில் செலுத்தப்பட்ட பிரதிபயன் (முகாமைக் கம்பெனி நிறுத்திவைக்க உரித்துடைய ஏதேனும் அறவீடுகள் நீங்கலாக) அத்தகைய பிரதிபயன் நம்பிக்கைப் பொறுப்பாளரி

னால் பெற்றுக்கொள்ளப்பட்டதன்மேல் உடனடியாக நம்பிக்கைப்பொறுப்பாளருக்கு அமைந்ததாதல் வேண்டுமென ஏற்பாடு செய்வதாக ;

(xiv) முகாமைக் கம்பெனியால் நிறுத்தி வைக்கப்படக்கூடியதான எவையேனும் விதிப்புகள் நீங்கலாக, அத்தகைய கூறுகளுக்கு செலுத்தப்பட்ட பிரதிபயன் நம்பிக்கைப்பொறுப்பாளருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதன்மேல் அல்லது உரித்தாக்கப்படும் என நம்பிக்கைப் பொறுப்பாளர் திருப்தியுறுவதன்மேல் மட்டுமே கூறுகள் தொடர்பிலான சான்றிதழொன்று மூன்றாம் திறத்தவர் ஒருவருக்கு வழங்கப்படுதல் வேண்டுமென ஏற்பாடு செய்வதாக ;

(xv) அனுமதிக்கப்பட்ட கூறுகளின் ஆகக் குறைந்த ஆரம்ப மூலதனத்தைக் குறித்துரைப்பதாக ; அத்தொகை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு அமைந்ததாக விருத்தல் வேண்டும் ;

(xvi) கூறுகளின் கொள்வனவின்மீது அறவிடக்கூடிய ஆகக்கூடிய ஆரம்பக் கட்டணத்தைக் குறித்துரைப்பதாக ; அக்கட்டணம் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு அமைந்ததாகவிருத்தல் வேண்டும் ;

(xvii) ஆணைக்குழுவினால் தேவைப்படுத்தப்படுகின்றவிடத்து, நம்பிக்கைப்பொறுப்பாளரின் பிழையான நடத்தை அல்லது கவனயீனத்தினால் வரும் இழப்புக்கு எதிராக உத்தரவாதம் செய்து அவரால் பிணைப் பொறுப்பு வைப்புச் செய்யப்படுவதற்கு ஏற்பாடுசெய்வதாக ; அத்துடன்

(xviii) அந்த நோக்கத்திற்காக ஆக்கப்பட்ட விதிகளால், காலத்திற்குக் காலம் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுமான வேறு அத்தகைய தகைமைகளைக் கொண்டிருப்பதாக.";

(5) அச் அட்டவணையின் பாகம் IV இனை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகத்தைச் சேர்ப்பதன் மூலமும் :—

"பாகம் V

அ கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றாக இருக்கும் முதலீட்டு முகாமையாளர், கடன் வசதி அளிப்பவர் அல்லது விற்கப்படாத பங்குகளை வாங்குபவர் என்போருக்குச் சந்தை இடைத்தரகர் ஒருவராகப் பதிவு வழங்கும் நோக்கத்திற்காக அத்துடன் அத்தகைய பதிவைப் புதுப்பிக்கும் நோக்கத்திற்காக இணங்கி ஒழுகப்படவேண்டிய நியதி, நிபந்தனைகள் பின்வருவனவாகும் :—

(i) விண்ணப்பகாரக் கம்பெனியானது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுப் பதிவுசெய்யப்பட்டதாக இருத்தல் அத்துடன், இது இலங்கைக்கு வெளியே முறையாகக் கூட்டிணைக்கப்பட்ட அல்லது ஏதேனும் வெளிநாட்டு நியதிச் சட்டத்தை, அரச பட்டயத்தை அல்லது உரிமைப்பேறுகளைப் பின்பற்றி அமைக்கப்பட்ட கம்பெனி ஒன்றையும், அத்துடன் எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றையும் உள்ளடக்கும் ;

(ii) விண்ணப்பகாரரின் பணிப்பாளர்கள் —

(அ) ஒருபோதும் வங்கி முறிந்தவர்களாக வெளிப்படுத்தப்பட்டிருத்தலாகாது ;

(ஆ) சந்தை இடைத்தரகர் ஒன்றாக யாருடைய பதிவு அல்லது பங்குத் தொகுதித் தரகர் அல்லது பங்குத் தொகுதி வியாபாரி அல்லது கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்றின் முகாமைக் கம்பெனி ஒன்றாக யாருடைய உரிமம் ஆணைக்குழுவினால் நீக்கப்பட்டுள்ளதோ அல்லது இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளதோ அந்தக் கம்பெனி ஒன்றின் ஆட்களாக அல்லது பணிப்பாளர்களாக ஒருபோதும் இருத்தலாகாது ;

(iii) விண்ணப்பகாரரின் சார்பில் வாடிக்கையாளர்களுடன் புழங்கவிருக்கின்ற எல்லாப் பணிப்பாளர்களும் ஊழியர்களும் காலத்திற்குக் காலம் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பொதுவான தகைமைகளையும் பயிற்சியையும் உடையவராக இருத்தல் ;

(iv) விண்ணப்பகாரர் கம்பெனி நல்ல நிதி நிலைமையில் இருத்தல் ; அத்துடன்

(v) விண்ணப்பகாரர், காலத்திற்குக்காலம் ஆணைக்குழுவினால் விதிக்கப்படக்கூடியவாறான கட்டணங்களுக்கு இசைந்து போவதாக இருத்தல்.

ஆ. தனியாள் ஒருவராக இருக்கும் முதலீட்டு முகாமையாளருக்கு சந்தை இடைத்தரகர் ஒருவராகப் பதிவுசெய்யும் அல்லது அத்தகைய பதிவைப் புதுப்பிக்கும் நோக்கத்திற்காக இணங்கியொழுகப்படவேண்டியதான நிதிகளும் நிபந்தனைகளும் பின்வருவனவாகும் :

விண்ணப்பகாரர் —

(i) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் ;

(ii) பொருத்தமானவரும் தகுதியானவருமான ஆளாக இருத்தல் அத்துடன் எந்நேரத்திலும் வங்கி முறிந்தவர்கள் என வெளிப்படுத்தப்படாதிருத்தல்;

(iii) காலத்திற்குக்காலம் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தகைமைகளையும் பயிற்சியையும் உடையவராக இருத்தல்; அத்துடன்

(iv) காலத்திற்குக்காலம் ஆணைக்குழுவினால் விதிக்கப்படக்கூடியவாறான வேறேதேனும் கட்டளைகளுக்கு இணங்கியொழுகக் கூடியவராக இருத்தல்.

இ. தீர்வையகமொன்றின் பணிகளைப் புரிகின்ற கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றை சந்தை இடைத்தரகரொருவராகப் பதிவுசெய்யும் அல்லது அத்தகைய பதிவைப் புதுப்பிக்கும் நோக்கத்திற்காக இணங்கியொழுகப்படவேண்டியதான நியதிகள், நிபந்தனைகள் பின்வருவனவாகும் —

(i) விண்ணப்பகாரர் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ்க் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனி ஒன்றாக இருத்தல் அத்துடன் இது இலங்கைக்கு வெளியே முறையாகக் கூட்டிணைக்கப்பட்ட அல்லது ஏதேனும் வெளிநாட்டின் ஏதேனும் நியதிச்சட்டத்தை, அரசபட்டயத்தை அல்லது உரிமையோலையைப் பின்பற்றி அமைக்கப்பட்ட கம்பெனி ஒன்றையும் அத்துடன் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ்க் கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றையும் உள்ளடக்கும்;

(ii) விண்ணப்பகாரரின் பணிப்பாளர்கள் —

(அ) ஒருபோதும் வங்கி முறிந்தவராக எனவெளிப்படுத்தப்படாதிருத்தல்;

(ஆ) சந்தை இடைத்தரகர் ஒருவராக யாருடைய பதிவு அல்லது பங்குத் தொகுதித் தரகராக, பங்குத்தொகுதி வியாபாரியாக அல்லது கூறு நம்பிக்கைப் பொறுப்பு ஒன்றின் முகாமைக் கம்பெனியாக யாருடைய உரிமம் ஆணைக்குழுவினால் இல்லாதாக்கப்பட்டு மற்றும் இடைநிறுத்தப்பட்

டுள்ளதோ அந்தக் கம்பெனி ஒன்றின் ஆட்களாக அல்லது பணிப்பாளர்களாக இல்லாதிருத்தல் ;

(iii) விண்ணப்பகாரர் நல்ல நிதி நிலைமையில் இருத்தல் ;

(iv) உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றில் விண்ணப்பகாரர் பங்குதாரர் ஒருவராக இருத்தல் ;

(v) விண்ணப்பகாரரின் விதிகள் பின்வருவன தொடர்பில் திருப்திகரமான ஏற்பாட்டைச் செய்தல் :

(அ) எந்த நிபந்தனைகளின் கீழ்ப் பிணையங்கள் வைப்பிடப்பட, தடுத்து வைத்திருக்கப்பட, மீளப் பெறப்பட அல்லது மாற்றப்படக்கூடியதாகுமோ அந்த நிபந்தனைகள் தொடர்பில் ;

(ஆ) வைப்பிடப்பட்ட பிணையங்களை வைத்திருப்பதற்காக ;

(இ) வைப்பிடப்பட்ட பிணையங்களின் கையாளுகைக்கான முறைக்காக ;

(ஈ) வைப்பிடப்பட்ட பிணையங்களின் இணக்கத்தை அடையச் செய்வதற்காக ;

(உ) வைப்பாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக அத்துடன் வைப்பிலிடப்பட்ட பிணையங்களினதும் அவற்றின் கையாளுகைகள் பற்றிய தகவலைப் பாதுகாத்தலும் கட்டுப்படுத்தலும் ;

(ஊ) விண்ணப்பகாரரின் விதிகளுடன் இணங்கியொழுகுவதைக் கண்காணிப்பதற்காகவும் அத்துடன் அவற்றைச் செயற்படுத்துவதற்காகவும் ;

(எ) விண்ணப்பகாரருக்கு எதிராக வைப்பாளர்களால் செய்யப்பட்ட கோரிக்கைகளை தீர்வுசெய்யும் நோக்கத்திற்காக காப்புறுதிப் பூட்கை ஒன்றை அல்லது காப்புறுதிப் பூட்கைகளைப் பேணுதல், பங்குபற்றுவோரிடமிருந்து உத்தரவாதங்களைப் பேணுதல், நட்டஈட்டு நிதியங்களைத் தாபித்துப் பேணுதல் என்பன தொடர்பில்; அத்துடன்

(ஏ) பொதுவாக, பொதுமக்களின் நலன்களை உரிய கவனத்திற் கொண்டு விண்ணப்பகாரரின் தொழிலைக் கொண்டுநடாத்துதல்.

(vi) காலத்திற்குக்காலம் ஆணைக்குழுவினால் விதிக்கப்படக்கூடியவாறான வேறேதேனும் கட்டளைக்கு விண்ணப்பகாரர் இசைந்து போதல்.

4. கடன் மதிப்பீட்டு முகவர் ஒருவருக்குச் சந்தை இடைத்தரகர் ஒருவராகப் பதிவு வழங்கும் நோக்கத்திற்காகவும் அத்துடன் அத்தகைய பதிவைப் புதுப்பிப்பதற்காகவும் இணங்கியொழுகப்பட வேண்டியதான நியதிகளும், நிபந்தனைகளும் பின்வருவனவாகும் :—

(i) விண்ணப்பகாரர் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனி ஒன்றாக விருத்தல்; அத்துடன் இது இலங்கைக்கு வெளியே முறையாகக் கூட்டிணைக்கப்பட்ட அல்லது ஏதேனும் வெளிநாட்டின் ஏதேனும் நியதிச்சட்டத்தைப் பின்பற்றி அல்லது அரச பட்டயம், உரிமைப்பேறுகை என்பவற்றைப் பின்பற்றி அமைக்கப்பட்ட கம்பெனி ஒன்றையும் அத்துடன் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ்க் கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றையும் உள்ளடக்கும்.

(ii) விண்ணப்பகாரரின் பணிப்பாளர்கள் —

(அ) ஒருபோதும் வங்கி முறிந்தவர்களாக வெளிப்படுத்தப்பட்டிருத்தலாகாது;

(ஆ) சந்தை இடைத்தரகர் ஒருவராக யாருடைய பதிவு அல்லது பங்குத் தொகுதித் தரகர், பங்குத்தொகுதி வியாபாரி அல்லது கூறு நம்பிக்கைப் பொறுப்பு ஒன்றின் முகாமைக் கம்பெனியாக யாருடைய உரிமம் ஆணைக்குழுவினால் இல்லாதாக்கப்பட்டுள்ளதோ அல்லது இடைநிறுத்தப்பட்டுள்ளதோ, அந்தக் கம்பெனியின் ஆட்களாக அல்லது பணிப்பாளர்களாக அவர்கள் ஒருபோதும் இருந்திருத்தலாகாது;

(iii) விண்ணப்பகாரரின் நல்ல நிதி நிலைமையில் இருத்தல்;

(iv) விண்ணப்பகாரரின் பணிப்பாளர், அலுவலர் அல்லது ஊழியர் எவரும் மோசடி அல்லது குற்றவியல் நம்பிக்கைத்துரோகம் அல்லது ஏமாற்றுதல் அல்லது குற்றவியல் கையாடல் என்பவற்றுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவராகவோ அல்லது வங்கி முறிந்தவர் என வெளிப்படுத்தப்பட்டவராகவோ அல்லது இந்தச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன்கீழ்ச் செய்யப்பட்ட ஏதேனும் விதிகளை அல்லது ஒழுங்குவிதிகளை மீறியமைக்காகக் குற்றவாளியாகக் காணப்பட்டவராகவோ இருத்தலாகாது;

(v) ஆணையாளரின் அபிப்பிராயத்தில் விண்ணப்பகாரரின் ஊக்குவிப்பாளர்கள் உறுதியும், நேர்மையும் உடைய ஆட்களாகவும், கடன் மதிப்பீட்டு முகாமையாளர் ஒருவராக கம்பெனியைக் கையாளக்கூடியதாக இருக்கின்ற விடயங்களின் விசேட அறிவைக் கொண்டவர்களாகவுமிருத்தல்;

(vi) விண்ணப்பகாரரின் பணிப்பாளர் எவரும் கூட்டிணைப்புத்தாபனம் ஒன்றில் அல்லது தொழில் நிறுவனத்தில் பணிப்பாளர் ஒருவராகவோ அல்லது ஏதேனும் கூட்டிணைப்புத்தாபனம் ஒன்றில் அல்லது தொழில் நிறுவனத்தில் ஐந்து வீதத்தை அல்லது அதற்கு அதிகமானதைக் கொண்டிருக்கும் பங்காளர் ஒருவராகவோ அல்லது விண்ணப்பகாரரால் மதிப்பிடுதலுக்கு உட்படுத்தப்பட்ட அத்தகைய ஒரு தாபனத்தில் ஏதேனும் வழியில் அக்கறையுடையவராகவோ இருத்தலாகாது ;

(vii) விண்ணப்பகாரரின் பணிப்பாளர், அலுவலர் அல்லது ஊழியர் எவரும், மதிப்பிடுதல் நோக்கத்திற்காக அவரால் பெறப்பட்ட தகவலை அவ்வாறு செய்வதற்கு சட்டத்தின்கீழ்த் தேவைப்படுத்தப்பட்டபோது தவிர, வேறு எவரேனும் ஆளுக்கு தெரியப்படுத்தலாகாது என்ற பொறுப்பேற்பு ஒன்று ;

14அ என்னும் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட தீர்வையின் வலிதாந்தன்மை.

**45.** இச்சட்டத்தின் 14அ என்னும் பிரிவின் ஏற்பாடுகள் எல்லா நோக்கங்களுக்காகவும் 1987 ஆம் ஆண்டு செத்தெம்பர் 10 ஆம் திகதியன்று செயற்பாட்டுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும். அத்துடன் அதற்கிணங்க அத் திகதியில் தொடங்கி இச்சட்டம் தொடங்கும் திகதியில் முடிகின்றதுமான காலத்தின்போது அறவிடப்பட்ட, விதிக்கப்பட்ட அத்துடன் செலுத்தப்பட்ட ஏதேனும் தீர்வையானது, எல்லா நோக்கங்களுக்காகவும் வலிதாக அறவிடப்பட்டதாக, விதிக்கப்பட்டதாக அத்துடன் செலுத்தப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**46.** இந்தச் சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.